செய்தி வெளியீடு எண். 157 நாள். 21.03.2018

**ஆட்சிமொழிப் பயிலரங்கம், கருத்தரங்கம் 27.03.2018 மற்றும் 28.03.2018 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இஆ.ப., அவர்கள் தகவல்**

அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் விரைவாகவும், முழுமையாகவும் நடைபெறத் துணைபுரியும் வகையில் ஆண்டுதோறும் ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பெற்று வருகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் 2017-18ஆம் ஆண்டின் ஆட்சிமொழிப் பயிலரங்கம், கருத்தரங்கம் 27.03.2018 மற்றும் 28.03.2018 ஆகிய இரண்டு நாள்களில் திருவள்ளூர் வி.எம் நகர், ஆர்.எம்.ஜெயின் பள்ளி (நகராட்சி அலுவலகம் எதிரில்) கூட்ட அரங்கில் ஒவ்வொரு நாளும் காலை 10.00 மணி முதல் 05.45 மணி வரை நடைபெறவுள்ளது. மாண்புமிகு தமிழ் வளர்ச்சி (ம) பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும், தமிழ் வளர்ச்சித்துறை (ம) செய்தித் துறை அரசு செயலாளர் அவர்கள், தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களும் 28.03.2018-ஆம் நாளன்று பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெறவிருக்கும் கருத்தரங்க நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இருக்கிறார்கள். மேற்காணும் இரண்டு நாட்களில் காலை 10 மணி முதல் 5.45 மணி வரை மாவட்டத்திலுள்ள அனைத்து அரசுத்துறை / வாரியம், கழகம், தன்னாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் இருவர் (இதற்கு முன்னர் இப்பயிற்சிகளில் பங்கேற்காத அலுவலர் மற்றும் கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் நிலையிலுள்ள பணியாளர்கள்) இரண்டு நாள்கள் நடைபெறுவுள்ள இந்நிகழ்ச்சிகளில் தவறாமல் பங்கேற்க வேண்டும். பயிலரங்கத்தின் வாயிலாக ஆட்சிமொழித் திட்டத்தின் இன்றியமையாமை, திட்டச் செயலாக்கம், செயலாக்கத்தின் பல்வேறு நிலைகள், அரசு அலுவலர் மற்றும் பணியாளர்கள் அனைவரும் தமிழில் மட்டுமே சுருக்கொப்பம், கையொப்பமிட வேண்டும் என்பது முதல் அனைத்து நிலைகளுக்குமான ஆட்சிமொழித்திட்ட அரசாணைகள் மற்றும் பட்டறிவும் எடுத்துரைக்கப்பெறும். மேலும், 28.03.2018 புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறவிருக்கும் தமிழாசிரியர்களுக்கான புத்தாக்கப்பயிற்சியில் திருவள்ளூர் மாவட்டத்திற்குட்பட்டு பணியாற்றும் தமிழாசிரியர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக்கொள்ள வேண்டும் எனவும், ஆட்சிமொழிப் பயிலரங்கம், கருத்தரங்கில் கோட்டம், மாவட்டம், வட்டம் மற்றும் சார்நிலைகளில் உள்ள பல்வேறு துறை அலுவலகங்களின் அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரும் அவசியம் பங்கேற்றுப் பயனடைய வேண்டும் என மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**